"UDAYAM" Weekly. Reg.




வார வெளியீடு. ஆசிரியர் :— M. கந்தசாமி

மலர் 1 | திருவத்திபுரம் 29—9—46 வியஹு புரட்டாசிமீ 13உ ஞாயிறு | இதழ் 9

19 OCT 1946

# மேயர் சிவராஜ்



பழங்குடி மக்களின் பாதுகாவலராக இருந்து வீரப்பணி யாற்றும சென்னை மேயர் சிவராஜ் அவர்கள் சின்னாட்களுக்கு முன்பு, சர்க்கார் தந்த பட்டத்தை உதறித்தள்ளியது வாசகர்களுக்குக் கவனமிருக்குமென்று நம்புகிறோம். மேயர் உடையில் (மாலையுடன்) காணப்படுபவரே தோழர் சிவராஜ் பழங்குடி மக்கள் படும் துயரைப் பிரிட்டிஷ் பார்லிமெண்டு கோஷ்டியிடம் அவர்எடுத்துக் கூறும்போது எடுக்கப்பட்ட படம் இது.

## மலாயாவில் இந்தியர் நிலை

Y. S. மேனன்

வெகுகாலத்துக்கு முன்பிருந்தே மலாயாவின் மீது இந்தியர்களுக்கு மிக்க கவர்ச்சி இருந்து வந்திருக்கிறது. ஆயிர வருடங்களுக்கு முன்பு, உலகின் இந்தப்பகுதியில் இந்தியர்கள் குடியேறி வாழ்ந்து வந்ததாகப் புதைப்பொருள் ஆராய்ச்சி நிரூபிக்கின்றது. மலாயாவின் சுதேசிகள் மலாய்க்காரர்கள், பார்வைக்கு நேப்பாள மக்களைப்போலிருப்பார்கள். ஆங்கிலோ-இந்திய ... கலந்த தேசிய இனத்தவர். இந்தியப் பாங்குதான் அதிகமாயிருக்கும்.

மலாயாவின் விஸ்தீரணம் 53,240 சதுர மைல். வேல்ஸ் பகுதியைச் சேர்க்காவிட்டால், இங்கிலாந்தைவிடச் சற்றுப் பெரியதே. இங்கே தனித் தனியாய்ப் பத்து அரசாங்கங்கள் இருக்கின்றன.

1937 டிசம்பர் 31-ந் தேதி எடுத்த கணக்குப்படி, மலாயாவின் மொத்த ஜனத்தொகை 51,37.074 பேர். இவர்களில் 21,69072 பேர் மாய்க்காரரும், மலாய-ஆசியாக்காரரும், 21,14,195 பேர் சீனர், 7,54,849 பேர் இந்தியர். நகரங்களில் சீனர்கள் தான் அதிகம். புதிதாக மலாயாவுக்கு வருகிறவர்கள் மலாயாவை சீனதேசம் என்றே நினைத்து விடுவார்கள்.

60 வருடத்திற்கு முந்தி மலாயாவில் ரயில்வேக்களோ, ரஸ்தாக்களோ அதிகமில்லை. ஆறுகள் தான் போக்குவரத்து வழிகள். மலாய்க்காரர்கள், வேகிலே புதுமைப் போக்கணக்குக் கொள்ளமாட்டார்கள். கண்மோழமை விரும்பிகள்! "தீடாகளி(பரவாயில்லை) என்று சொல்லிக்கொண்டு "சும்மா இருப்பதே சுகம்" என்று வாழ்க்கை நடத்துகிறவர்கள். அரசியல் அவர்களுக்குப் பிடிக்காது. நாட்டையார் ஆண்டாலும் சரிதான். நாட்டின் செல்வத்தை யார் சுரண்டினாலும் அக்கரையில்லை. இதையெல்லாம் சுல்தான் பார்த்துக்கொள்ளவிட்டு விடுவார்கள். மலாயாவில் ஏராளமாய் சுயம் இருந்தும் இவர்கள் அதைப்பயன்படுத்திக்கொள்வதில்லை. ஏதோ, சொற்பத் தொகையை மொத்தமாக வாங்கிக்கொண்டு, சீனர்களிடம் அதை ஒப்படைத்து விட்டார்கள்.

உஷ்ணமும், மழையும் நல்லபடியாயுள்ள மலாயா, பூமி வளமுடைய செழிப்பான நாடு. அரிசி, தேங்காய், எருவகை பனைமர எண்ணெய், சருமபு, காப்பி, தேயிலை, ரப்பர் முதலிய முக்கியமான உற்பத்திப் பொருள்கள். ஈயம் நாடு பூராவும் கிடைக்கிறது. இவ்வளவும் இருந்தும், கூலி ஆட்கள் அங்கே இல்லை. மலாய சுதேசிக் கூலிகள் சரியானபடி அகப்படமாட்டார்கள். இதற்கு இந்தியாவும், சீனாவும் உதவிக்கு வந்தன.

போன நூற்றுண்டுக்கடைசி வருடங்களில் இந்தியாவிலிருந்து மலாயாவுக்கு ஏராளமாகக் கூலிகள் கிளம்பிப் போனார்கள் தேயிலைத் தோட்டங்களுக்கு ஒப்பந்தக் கூலிகள் பேசி அனுப்புகிறமாதிரி இவர்கள் போனார்கள். 1880 முதல் 1904 வரை, வருடா வருடம் சராசரி 20,000 பேர் மலாயாவுக்குப் போனார்கள். கூலி ஒப்பந்த முறையை "ராட்சசமுறை, பாபகரமானது; மோசடியானது; பலத்தைக்கொண்டு மட்டுமே கட்டாயமாக இது நடத்தப்பட்டு வருகிறது; நீதியற்றது; இதை அனுமதிக்கிற தேசத்துக்கு மாறாத இழுக்குத் தேடக்கூடியது" என்று ஸ்ரீ ஜி. கே. கோகலே கூறினார்.

கல்லவேளை 1910-ல் இந்த ஒப்பந்த முறை ஒழிக்கப்பட்டு, இதற்குப் பதிலாகக் கங்காணி முறை நடைமுறைக்கு வந்தது. கங்காணி என்றால், அவன் "கூலி பிடிக்கும் சர்க்கார் ஏஜண்டு" என்று பொருள். கங்காணிகள் என்னென்னவோ ஆசை வார்த்தைகாட்டி, ஏழை எளியவர்களை—ஆண், பெண் இருவரையும் குழந்தைகளையும் கூடத் தான்—வலை வீசிப் பிடித்து, அயல் நாட்டில் கொண்டுபோய் அடிமைகள் மாதிரி சர்க்காரிடம் ... விடுவார்கள். "கூலிகளை ... வேண்டும்; இவர்களுக்கு வசதி பண்ணிக்கொடுத்துப்பாதுகாத்து வரவேண்டும்; சம்பளம் முதலிய விஷயத்தில் நியாயமாய் நடத்த வேண்டும்" என்றெல்லாம் சட்டம் இருக்கிறது. ஆனால் சட்டம் நடைமுறைக்கு வருவதே இல்லை. 1911 முதல் 1920 வரைக்கும் வருடா வருடம் சராசரி 90,000 பேர் மலாயாவுக்குக் கங்காணிக் கூலியாகப் போயிருக்கிறார்கள்.

கூலிகளுடன், இந்திய வர்த்தகர்களும், படித்த மத்தியதர வகுப்பினரும் தோட்டங்களில் வேலை தேடி மலாயாவுக்கு வந்தார்கள். சர்க்கார் உத்தியோகங்கள் இந்தியர்களுக்குக் கிடைக்காமல் இருந்தது விநோதமே. இதற்கு இரண்டு காரணங்கள் சொல்லலாம். சம்பளம் குறைவு; யாழ்பாணத் தமிழர்கள் தான் அதிகமாக சர்க்கார உத்தியோகங்களைப் பார்த்து வந்தார்கள்.

சீனர்கள் பெரும்பாலும் வர்த்தகர்கள். மலாய்க்காரர்களுக்குப் படிப்பு இல்லை. யாழ்ப்பாணத்திலிருந்தும், இலங்கையிலிருந்தும் வந்த தமிழர்களுக்குச் சர்க்கார் உத்தியோகங்கள் கிடைத்தன தங்கள் பதவியைப் பிறர் பற்றிக்கொள்ள இவர்கள் இடங்கொடுக்க மாட்டார்கள். ஆனால், நம்முடைய இந்தியர்களில் பெரும்பாலோர் ரப்பர்த் தோட்டங்களில்தான் குமாஸ்தா வேலை பார்த்து வந்தார்கள். முதலில், இவர்கள் சொற்பப் பேர் தான். 1945ல் தோட்டங்களில் வேலை பார்த்து வந்தவர்கள் பெரும்பாலும் இந்தியர்கள்தான். வக்கீல்கள் பலர் பின்னால் வந்து சேர்ந்தார்கள். அப்புறம் தொழில் நிபுணர் பலர் வந்தார்கள். போலீஸ்காரரில் பகுதிப்பேர் சீக்கியர். காவல்காரர்கள் பூராவும் சீக்கியர்கள்தான்.

ஒவ்வொரு நகரத்திலும் பார்க்கக்கூடிய இன்னொரு வகுப்பார நாட்டுக்கோட்டைச் செட்டியார்கள். அடுத்தடுத்த வீடுகளில் ஒன்றாகச் சேர்ந்து தான் இவர்கள் வசிப்பார்கள். முடிந்தால், ஒரே தெருவில்தான் இவர்கள் இருப்பார்கள். இவர்களுடைய வாசஸ்தலந்தான் தொழில் ஸ்தலமும்.

இதன் தொடர்ச்சி 5ம் பக்கம்

கற்பனைச் சித்திரம்.

## கள்வன் யார்?

(சண்முகம்)

சிறைக்கதவு அகலத் திறந்தது. இரத்தினகிரீசுவரர் ஆலயத்தில், சுவாமியின் சிரசில் மின்னிய பத்தாயிர ரூபாய் பெருமானமுள்ள நவரத்ன கிரீடத்தைக் களவாடிய குற்றத்துக்காகக் கண்ணப்பனை சிறை பரிவுடன் வரவேற்றது. இன்னும் ஒரு வருடத்திற்குக் கண்ணப்பன் அதன் விருந்தாளி. அரசாங்கத்தாரால் அளிக்கப்பட்ட **“96ம் நம்பர்”** என்ற புதுப்பெயரைத் தாங்கிக்கொண்டு உள்ளே நுழைந்தான். இரைகிடைத்த திருப்தியில் தன் அகன்றவாயை ஆனந்தத்துடன் மூடிக்கொள்ளும் பாம்பைப்போல, சிறைக் கதவு மூடிக்கொண்டது. அதே நேரத்தில் வெவ்வேறு இடங்களில் நடந்த இரண்டு நிகழ்ச்சிகளைப்பற்றிக் கண்ணப்பனுக்குத் தெரியாது! அவன் வீட்டில் நோயாளியான—பூர்ண கர்ப்பிணியான அவன் மனைவி சிவகாமியின் உடலை விட்டு உயிர் பரிதாபகரமான நிலையில் விடுதலையடைந்தது. பசிக்கொடுமை தாளாது கத்திப்பார்த்துவிட்டுத் தாயிடமிருந்து பதிலொன்றும் காணாததால் கண்ணப்பனின் மூன்று வயது குழந்தை சோர்ந்து போய் தரையில் உருண்டது. இரத்தினகிரீசுவரர் ஆலய குருக்கள், சாமிநாதய்யர் தம் வீட்டில் மறைவான ஒரு இடத்தில் நவரத்ன கிரீடத்தைப் போட்டுப் புதைத்துவிட்டு ஆனந்தப் பெருமூச்சு விட்டுக்கொண்டார். இந்த இரண்டு நிகழ்ச்சிகளையும் அவனால் எப்படித் தெரிந்துகொள்ள முடியும்.

தரையில் கிடந்த அழுக்கேறிப் போன கம்பளிப் படுக்கைமீது அமர்ந்து ஒரு ஏக்கப் பெருமூச்சுவிட்டுக்கொண்டு சிந்தித்தான். ஒரு பயங்கர கனவு போல முந்திய இரவு நடந்த சம்பவங்கள் அவன் மனக்கண்களின் முன் தோன்றின.

எலும்பும் தோலுமாகப் படுக்கையில் கிடந்த சிவகாமியின் அருகே அமர்ந்து அவளுக்குப் பணிவிடை செய்து கொண்டிருந்தான். பசிவேதனையால் அவன் குழந்தை, சிவகாமியின் முகத்தைப் பார்த்தபடியே கதறிக்கொண்டிருந்தது.

சிவகாமி கண்ணைத் திறந்து பார்த்து மூன்று நாட்களுக்கு மேலாகிவிட்டது. அவன் விடும் ஒவ்வொரு பெருமூச்சும், குழந்தையின் கதறலும், பல சம்மட்டி அடிகளாக அவன் இதயத்தின் மீது விழுந்து கொண்டிருந்தன. அருகிலிருந்த அகல் விளக்கில் கூட எண்ணெயில்லை. அணைந்துபோகும் நிலையில் மங்கலாக ஆடி ஆடி எரிந்துகொண்டிருந்த அதன் ஒளி அவன் உள்ளத்தில் ஆயிரக் கணக்கான பயங்கர நினைவுகளை எழுப்பிக்கொண்டிருந்தது. விளக்கின் முடிவுக்கும் சிவகாமியின் உயிருக்கும் ஏதாவது சம்பந்தமிருந்துவிட்டால்......? மூடநம்பிக்கையில் பலமாக ஆழ்ந்துபோயிருந்த அவன் நெஞ்சு இப்படியெல்லாம் நினைத்தது.

தட, தட, வென்ன மூடியிருந்த கதவை யாரோ இடித்தார்கள். “யாரது ...?” என்று கேட்டுக்கொண்டேபோய் திறந்தான். கையில் “அரிகேன்” விளக்குடன் இரண்டு போலீஸ்காரர்கள் நின்று கொண்டிருந்தனர். “என் ...ன?” என்று திடுக்கிட்டுக்கேட்டான்.

“இன்ஸ்பெக்டரய்யா அழைத்து வரச் சொன்னார். செட்டியார் வீட்டிலிருக்கிறார். உடனே புறப்படு”.

அச்சத்தால் கண்ணப்பன் விலவிலத்துப் போய்விட்டான். “இன்ஸ்பெக்டரய்யாவா? என்னையா...? எதற்காக......?” என்று தட்டுத்தடுமாறிக் கொண்டே கேட்டான்.

“வந்தால் தெரிந்துபோகும்!” என்று பதில் வந்தது.

“இப்பொழுதே புறப்படணுமா?... காலையில்.......வருகிறேனே........?” என்று இழுத்தான்.

“அண்ணே! ஐயாவுக்கு நான் சொன்னதைத் தமிழில் மொழிபெயர்த்துச் சொல்லு. புரியவில்லை போலிருக்கு” என்று தனக்குள்ள ஹாஸ்யத்திறமையை வெளிப்படுத்திவிட்டு ஒரு போலீஸ்காரர் இடி யிடியென நகைத்தார். “இல்லிங்க...வீட்டிலே உடம்பு சரியாயில்லே. நான் வந்துவிட்டால் கவனிப்பதற்கு வேறு ஆள் இல்லே. அதற்காகத்தான் சொன்னேன்” என்றான் கண்ணப்பன் பணிவுடன்.

“அதெல்லாம் தெரியாதப்பா! உன்னை உடனே அழைத்து வரும்படி எங்களுக்கு உத்தரவு. அவ்வளவுதான்.” என்று கண்டிப்பாகப் பதில் கிடைத்தது.

கண்ணப்பன் திரும்பிப்போய் சிவகாமியைப் பார்த்தான். அசையாமல் கிடந்த அவள் கொஞ்சம் புரண்டுப் படுத்தாள். கண்ணப்பன் கீழே குனிந்து பரிவுடன் “சிவகாமி......” என்று கூப்பிட்டான். இரண்டு குழிகளுக்கு உள்ளே ஆழ்ந்து கிடந்த விழிகளின் இமைகள் பாதி விலகின. உதடுகள் இலேசாக அசைந்தன. ஏதோ சொல்ல முயன்றாள். முடியவில்லை: மறுபடியும் கண்களை மூடிக்கொண்டாள். அழுது களைத்துப்போன குழந்தை, தரையில் படுத்து ஆழ்ந்த நித்திரையில் மூழ்கிக் கிடந்தது.

“என்னப்பா! நாங்கள் நிற்பதை மறந்தே விட்டாயா?” என்று வெளியேயிருந்து சப்தம் வரவே “வந்து விட்டேன்” என்று கூறிக்கொண்டே வெளியே வந்தான்.

செட்டியார் வீட்டு வெளி வராந்தாவில் மின்சார விளக்கொளியில் சப் இன்ஸ்பெக்டர், குருக்கள் சாமிநாதய்யர், வினைதீர்த்தான் செட்டியார் ஆகியோர் அமர்ந்திருந்தனர். கண்ணப்பன் அவர்களைப் பணிவுடன் வணங்கிவிட்டு ஒரு பக்கமாக நின்றான். போலீஸ்காரர் இருவரும் அவனருகே நின்றனர். சப் இன்ஸ்பெக்டர் கண்ணப்பனை ஒரு தடவை ஏற, இறங்கப் பார்த்துவிட்டு “ஆளைப் பார்த்தால் ரொம்ப சாதுவாகத்தான் இருக்கு!...ம்... என்ன... கண்ணப்பா...... சுவாமி கிரீடமெல்லாம் உனக்கு எதற்கு. அதை எங்கு வைத்திருக்கிறாய்” என்று ஆரம்பித்தார்.

“சுவாமி கிரீடமா?...என்ன கேட்கிறீர்கள்” என்று புரியாமல் கண்ணப்பன் கேட்டான்.

“சரி...புரியும்படி கேட்டால் தான் சொல்வாய் போலிருக்கு” என்று சொல்லிக்கொண்டு, சப் இன்ஸ்பெக்டர் இடுப்பிலிருந்த ‘பெல்ட்’டை கழற்றினார். பிறகு அவனருகே சென்று நின்று கொண்டு “கோயிலிலிருந்து எடுத்துப்போன நவரத்ன கிரீடத்தை எங்கு வைத்திருக்கிறாய் என்று சொல்லப் போகிறாயா? அல்லது அடிபட்டுச் சாகப் போகிறாயா?” என்று கொஞ்சம் கடுமையான குரலில் கேட்டார்.

கண்ணப்பன் பாம்பை மிதித்தவன் போல துள்ளிக்குதித்தான். “என்னங்க இது...ஒண்ணுமே புரியலியே......” என்று நடுங்கும் குரலில் தயங்கித் தயங்கிக் கூறினான்.

அவன் பேச்சை அநுதாபத்துடன் கேட்க அங்கு யாருமே இல்லை. போலீஸ்காரர் இருவரும் அவனை நையப் புடைத்தனர். குருக்களும், செட்டியாரும் பின்னால் அவர்களுக்குத் தூபம் போட்டபடியே இருந்தனர். ஆனால் அவன் கடைசிவரை தன் மீது குற்றமில்லையென்றே சொல்[illegible]ண்டான். ஆத்திரமடைந்த சப் இன்ஸ்பெக்டர் அவனைத்தன் ஆபீசுக்கு இழுத்துப் போகும்படி உத்தரவிட்டார். வீட்டுக்குப்போய் ஒரு தடவையாவது சிவகாமியைப் பார்த்துவிட்டு வந்துவிடுவதாக, கண்ணப்பன் எவ்வளவோ மன்றாடியும் கேட்கவில்லை. பர பர வென அவனை இழுத்துச் சென்று விட்டனர். மறுநாள் அவனுக்கு ஒரு வருடக் கடுங்காவல் தண்டனை கிடைத்தது.

சிறையில், இந்த நிகழ்ச்சிகளைப்பற்றி சிந்தித்தவுடன் கண்ணப்பனுக்குச் சிவகாமியின் நினைவு எழுந்தது. “ஐயோ இப்பொழுது அவள் எப்படியிருக்கிறாளோ” என்று எண்ணிய பொழுது தன்னைமீறி எழுந்த துக்கத்தை அவனால் அடக்க முடியவில்லை. கண்களை மூடிக்கொண்டு சிறு குழந்தையைப் போல தேம்பித் தேம்பி அழுதுவிட்டான். பாவம்! அவன் அன்புக்கிளி அவனைவிட்டு நழுவிவிட்டது என்பதை அவன் அறிந்தால்......?

அந்த நகரில் வினைதீர்த்தான் செட்டியார் பெரிய செல்வந்தர். [illegible]யில் திருப்பணி செய்வதில் சி[illegible] என்று பெயரெடுத்தார். [illegible]ரால் ஒரு குட்டிச் சுவராகு பு[illegible] படாமல் தமிழ் நாட்டில் ஒரு [illegible]லைக் கூட காண முடியாது. தன் செல்வத்தில் பாதிக்குமேல் கோயில் திருப்பணிகளுக்காகவே செலவழித்திருக்கிறரென்றால், பார்த்துக் கொள்ளுங்களேன். அண்மையில் உள்ளூரிலிருக்கும் இரத்தினகிரீஸ்வரர் ஆலயம் முழுவதையுமே புதுப்பித்துக்கும்

இதன் தொடர்ச்சி 7-ம் பக்கம்

## இன்னுமா உறக்கம்?

(திருவத்திபுரம் வித்துவான் மாவண்ணு தேவராசன்)

“இந்திக்குத் தமிழ் நாட்டில் ஆதிக்கமாம்” எ. இ. பாடுக

**தொண்டர் நலிவன்:-**
இன்னும்நீர் எத்தனை நாள் உறக்கம்—கொண்டு
இழிந்த நிலையினில் வாழ்ந்திடுவீர்?
வன்னெஞ்ச **ஆரியக் காங்கிரஸார்**—செய்யும்
வஞ்சகத்தை நேரில் நெஞ்சுணர்ந்தும்

**எல்லோரும்:-** இன்னும்நீர்...........வாழ்ந்திடுவீர்?

**தொ. ந.**
ஆயிரம் ஆண்டுகளாக நாமும்—அந்தோ!
அடிமையாய்ப் பிறர்க் குழைத்தே கிடந்தோம்!
போயின நாள்போக; துணிந்தினிமேல்—எனும்
போரிட்டவ் வஞ்சரைப் பொசுக்கிடாமல்

**எல்லோரும்:-** இன்னும்நீர்...........வாழ்ந்திடுவீர்?

**தொ. ந.**
பார்ப்பனக் **காங்கிரஸ்** பட்டிமையை—எங்கள்
பார்புகழ் மும்பேரி **யார்** உணர்ந்தே
தீர்ப்புறத் திராவிட நாடு நமக்—கென்றே
**திராவிடர் கழகம்** அமைத்த பின்னும்

**எல்லோரும்:-** இன்னும்நீர்...........வாழ்ந்திடுவீர்?

**தொ. ந.**
கறுப்புச்சட் டைப்படை கண்டுவிட்டோம்—நம்மைக்
காட்டிக் கொடுத்தவர் ஓடி விட்டார்?
வெறுப்பளிக்கும் கெட்ட இழிநிலையை—இனி
வீரமாய் வெட்டி நாம் வீழ்த்திடாமல்

**எல்லோரும்:-** இன்னும்நீர்...........வாழ்ந்திடுவீர்?

**தொ. ந.**
“**திராவிட நாடென்றும் திராவிடர்க்கே**”—என்று
[illegible] எதிர்த்திடக் கூடிவிடுவோம்;
**பெரியார்** தலைமையில் **ஆரியத்தை**—வீழ்த்தப்
பிரியமாய் **கருஞ்சட்டை** அணிந்திடாமல்

**எல்லோரும்:-** இன்னும்நீர்...........வாழ்ந்திடுவீர்?

குறிப்பு:—இப்பாடல் **ஸ்ரீ இலக்ஷ்மி நூல் பதிப்பகத்தார்** வெளியீடான **“கருஞ்சட்டை வீரர் வழிநடை பாக்கள்”** என்ற நூலிலிருந்து எடுக்கப்பட்டது.

## "ஓர் இரவு" நாடகம்

# பொன் விழா

தோழர் K. R. இராமசாமியின் கிருஷ்ணன் நாடக சபையார் தஞ்சையில் ஓர் இரவு நாடகம் நடித்து வருவதைப் பலர் அறிந்திருக்கலாம். இந்நாடகத்தின் பொன் விழா சென்ற 11—9—46ல் தஞ்சை இராமனாதன் செட்டியார் ஹாலில் தோழர் எஸ். டி. சுந்தரம் தலைமையில் கொண்டாடப்பட்டது. உள்ளூரிலிருந்தும் வெளியூர்களிலிருந்தும் பல தோழர்களும் மற்றும் கவிஞர் பாரதிதாசன் C. N. அண்ணாதுரை, நெடுஞ்செழியன், V. C. சின்னத்தம்பி ஆகியோரும் வந்திருந்தனர்.

தலைவருக்கும் "ஓர் இரவு" நாடகத்தைத் தோற்றுவித்த தோழர் C. N. அண்ணாதுரையவர்களுக்கும் சபையினரால் மலர் மாலைகள் அணிவிக்கப்பட்டன.

தலைவர் பேசுகையில், 12 இரவைப் பற்றி எழுதிய ஆங்கில நாவலாசிரியர் ஷேக்ஸ்பியர் இந்த ஓர் இரவு பற்றி எழுத மறந்துவிடவே, நமது நாட்டின் ஷேக்ஸ்பியர் தோழர் C. N. A. அவர்கள் இப்பொழுது இந்நாடகத்தைப் பற்றி எழுதியுள்ளார் என்று தோழர் அண்ணாதுரையவர்களைப் பாராட்டிப் பேசியதும் மக்கள் கைதட்டி ஆரவாரம் செய்தனர்.

சபையின் உரிமையாளர் தோழர் K. R. இராமசாமி தமது அன்பின் அறிகுறியாக தோழர் அண்ணாதுரையவர்களுக்கு ஒரு பெரிய வெள்ளிக் கோப்பையைப் பரிசாக அளித்தார்.

[illegible] நாட்டித் தலைவரும் மற்[illegible]ம் பேசியதற்குப் பதிலளிக்கையில், நாடகங்கள் எழுதவதென்றால் எத்தகைய நாடகங்கள் எழுத வேண்டும் என்பது பற்றியும் மக்கள் தற்போது எத்தகைய நாடகங்களை வரவேற்கிறார்கள் என்பதையும், தோழர் சுந்தரம் அவர்கள் சமூக முன்னேற்றத்திற்கான நாடகங்கள் இயற்ற வேண்டுமென்று கேட்டுக் கொள்வதாகவும் கிருஷ்ண நாடக சபையினர் மேலும் மேலும் வளம் பெற்று வாழ்வதுடன் தங்கள் நாடகங்கள் மூலம் நாட்டு மக்கள் புத்துணர்ச்சி பெறுகிறார்களா என்பதைக் கவனிக்க வேண்டுமென்றும் தோழர் C. N. A. அவர்கள் கேட்டுக் கொண்டார். தோழர் திருவேங்கடம் செட்டியார் நன்றிகூற வைபவம் இனிது முடிவுற்றது.

---

## ஓர் இரவு

(N. S. சண்முகவடிவேல்)

தஞ்சை இராமனாதஞ் செட்டியார் ஹாலில் K. R. இராமசாமியின் கிருஷ்ணன் நாடக சபையாரிடம் ஓரிரவைக் கண்டேன். கண்டதும் மட்டுமின்றிக் களிப்புமடைந்தேன். அடைந்தது சமுதாயத்தின் ஊழலும், பணத்தின் திமிரும், பாட்டாளியின் பரிதவிப்பும். ஏழையின் எண்ணங்களும், பதவிவேட்டைக் காரர்களின் படாடோபமும். உணர்ந்தது உலகில் இருஜாதி ஒன்று பணக்காரன், மற்றொன்று ஏழை. இன்று நம் தமிழ் நாட்டு மக்கள் நிலையும் இவ்விதம் தான் இருக்கின்றது. நாடு முன்னேற, இன முன்னேற்றம் தேவை.

தோழர் C. N. அண்ணாத்துரை M. A. அவர்கள் புதுமையான கற்பனைகளைப் புது உலகுக்கு அள்ளி அள்ளி வீசுகின்றார். யாரும் நாடகங்களில் கொண்டுவராத அருமையான உவமைகள் உள்ளத்தின் ஆழத்தைக் காணும் அழகிய அடுக்குச் சொற்கள் "சந்திரன் வெள்ளியை உருக்கி வார்க்கிறான்" என்கிறான் சேகர். ஆம்! இருக்கலாம்!! ஆனால் எங்கள் அண்ணா கொடுப்பதோ இன்பத் தேனுடன் பகுத்தறிவு செந்தூரத்தைக் கலந்து வாழ்க்கை யென்ற அருவியில் விடுகின்றார். தோழர்களே! தவறாதீர்கள். தஞ்சைக்குச் சென்று அந்த நீரோடையின் நீரை யருந்துங்கள் பின்னர்தான் அதன் பெருமை உங்களுக்குத் தெரியும். 'அமுதம்' என்று கூறும் பித்தர்களிடம் கூறி இதன் உருசியைக் காணச் சொல்லுங்கள். அதன் உருசியைக் கண்டிருந்தாலல்லவா? இதன் உருசியை இவர்கள் உணர.........!

இரவில் இருவர் தோன்றி இன்னிசை முழங்குகின்றனர். இரவு 7மணிகள் டான் டான் என முழங்கி வாழ்க்கையின் இதயம்போல் டக்...டக்...டக் கென்று வாழ்க்கையுடன் ஒத்த கடிகார முள் நகர்கின்றது. இரு கலைஞர்களைத்தான் சித்தரித்துள்ளார்கள். கலையைத் தீர்ப்பவர்கள் கலைஞர்கள். தான் நிம்மதியற்ற வாழ்க்கை பாழ்! டணார், டணார் என 6 மணிகள் முழங்கத் தனது தங்கச் சோலையில் உதயமாகிறான் கதிரவன். இருமணிகள் விடுதலை! ஆம்! உண்மை!! இது நாட்டு மனிதர்கள் உணர வேண்டியது......... ..?

அல்லிமலர தாமரை குவிகின்றது. வாழ்க்கையில் பணக்காரன் ஏழை உண்டாவதும் இவ்விதம் தான் என்பது போன்றுள்ளது. இருமலரில் இரு உள்ளம் அவர்கள்தான். சேகர், சுசீலா 'கவிதை' சுகபோகிகளுக்கு என்கிறான் சேகர். இல்லை! அது பாமரன் சமுதாய நிலையை உணர்த்த என்கிறார் கவியரசர் பாரதி தாசன் "வானுற மாமதி போல" என்று இருவர் பாடும் பாட்டு மக்களை மகிழ்விக்கின்றது.

இரவில் பல நிகழ்ச்சிகள் காண்பிப்பது நன்றாகவே இருக்கின்றது. ஓர் இடத்தில் மட்டும் "ஏழை பணக்காரன் என்ற வித்தியாசமில்லாமே நிலவு ஒன்று தாண்டி பிரகாசிக்கின்றான். இதுகிட்ட பணக்காரன் வூட்டு எலக்கட்டரீ...விளக்கு என்னடீ செய்யும்" என்றதும் கொட்டகை அதிரும் கைதட்டல்.

சேகர் தனது காதலியை எண்ணியபடி படுக்கையில் படுத்திருக்கையில் தூக்கம் வராமல் அவள்மேல் காதல் கொண்டிருக்கும் காட்சியை தோழர் S. C. கிருஷ்ணன் மிக அழகாக மேல்நாட்டுப் படங்களை ஒத்து நடித்துக் காண்பிக்கின்றார். காமத்தின் நிலைகளை உணரச் செய்கின்றார். இயற்கையாக உள்ளது இன்பத்தேனுடன் இன்னிசையை வழங்கி நம்மை மகிழ்விக்கின்றார்.

கள்ள பார்ட்டு குள்ளாச்சாரி வேடமும், தெருக்கூத்தும் பழங்காலத்தை நினைப்பூட்டவே சேர்த்துள்ளார்கள் என எண்ணுகின்றேன். ரௌடி ரத்னமாக நடிக்கும் M. N. கிருஷ்ணன் நடிப்பு கடைசிவரையில் அபாரம், 'நாங்கள் சாக்கடை புழுக்கள் ஆனால், இந்தச் சாக்கடை பணக்காரர்களின் காமச்சேற்றிலிருந்து உண்டாகிறது" என்ற சொல் மட்டும் என்னை! ஏன்? ஏன்? என்று அன்று இரவெல்லாம் என்னைத் தூக்கமின்றி காலைச் செவ்வானைச் சந்திக்கச் செய்தது. உண்மை இரத்தினம் இப்படித்தான் இருப்பான் என்பதை நன்கு நடித்துக் காட்டுகிறார்.

கருணாகரத் தேவராக நடிக்கும், தோழர் மருதப்பா தன் நிலைக்கும், வயதிற்கும் ஏற்ப நடிக்கின்றார். சோகமான கட்டங்களில் இன்னும் கொஞ்சம் உணர்ச்சியுடன் நடித்தால் நன்றாயிருக்கும். கடைசி சொற்கள் தேவை. கூடிய வரை நன்றாகவே நடிக்கின்றார். என் கண்ணீரை வடித்தவர் மட்டும் அவர் அல்ல, மாஸ்டர் G. C. மகாலிங்கம் ஆவார். தன் ஏழ்மைக்காக, விதவைக் காதல், பின் விபசாரம், பின்னர் கைவிடுதல் போன்ற காட்சிகளில் நாக்குக்கு வேலை கொடுத்து விடுகின்றார். என்னதான் செய்வார்! ச்சு...ச்சு ...ச்சு தான் கொட்டகை முழுதும். விட்ட குறை தொட்ட குறை "என்கிறார் தன் காதலனிடம் எனக்கு என்னமோ நாடகத்தில் குறையுண்டா? என்பது போல் ஒலித்தது. உடனே என் பக்கத்திலிருந்த நண்பர், "அடடா! இந்தமாதிரி நாடகமே பார்த்ததில்லை மிஸ்டர்" என்றார். உடனே என்மனம் ஆம்! போட்டது,

வைத்தியராய் நடிக்கும் தோழர் இராமமூர்த்தி மிக அழகாக நடிக்கின்றார். மேக்கப் அருமை. கருத்துடன் ஒட்டிய நகைச் சுவைகள் அண்ணா அவர்கள் என். எஸ். கேயைப் புகழும் இடத்தைத் தாவிப் பிடித்து விட்டார்!

தோட்டக் காரனாய் நடிக்கும் S. S. சிவசூரியன் 'கலைமணி' கிருஷ்ணன் பாடிய "நஞ்சுத் தண்ணி இல்லாமே" என்ற மெட்டில் "என்னைக்கு எல்[illegible] நல்லா இருக்கோணு மின்னுதா வரப்புடுச்சுழுவோம் நாங்களே" என்ற பாட்டைப்பாடி மக்களிடம் சபாஷ் பட்டமும், கைதட்டலும் பலமாகப் பெறுகின்றார் அழகிய கருத்துக்கள் அடங்கியது. இவர் நடிப்பு சமூக ஊழல் கண்ட உழவனாய், மிக அழகாக நடிக்கின்றார்.

லேடன் லேடியாக நடிக்கும் தோழர்கள் P. S. தட்சிணாமூர்த்தியும் P. R. லட்சுமிபதியும் மேடையில் தோன்றியதுமே மக்கள் வயிறு புண்ணாகின்றது. நாகரிகத்தின் போக்கை நன்றாகச் சித்தரித்துக் காட்டியுள்ளார் உடுமலை நாராயணக்கவியவர்கள். இது தனி காமிக்காக இருந்தாலும், பொருத்தமாகவும், வயிறு புண்படவும் செய்து விடுகின்றார். கவி அது போன்றே கருத்து நிரம்பிய அவர் பாட்டுக்கள் ஆனந்தத்தையும் அறிவையும் கொடுக்கின்றன. நாடகம் முடிந்ததும் இருவரைப் பற்றித்தான் புகழ் மலர்களைத் தூவிச் செல்கின்றனர்.

சில இடங்களில் அனாவசியமாக ஆங்கிலச் சொற்களைச் சொல்லி சிரிப்பு மூட்டுவது அவ்வளவு பொருத்தமாக இல்லை.

மேன்தாராக நடிக்கும் தோழர் S. நடேசன் நன்றாகவே...நடிக்கின்றார்! நடைப் பொருத்தம் மட்டும் தேவை. வேஷப்பொருத்தம் சுமார். மற்றப் பகுதிகள் நன்று.

சுசீலாவாக நடிக்கும் சிறுவன் மணி நன்றாகவே நடிக்கிறான் ஆனால் சேகருக்குத் தகுந்த உயரமில்லை. வசனங்கள் இன்னும் கொஞ்சம் புரியும் படி நிறுத்திப் பேசலாம். கூடியவரை சிறு... இருந்து இப்பாத்திரத்தை நடிப்பு மெச்சக் கூடியதே.

இடையில் சினிமாக்காட்சியும் காண்பிக்கப்படுகிறது நன்றாகவுள்ளது. யாரும் கையாளாத புதுமுறை. பல மக்கள் நாடகத்துடன் சினிமாவும் பார்க்கின்றோமே என்ற சந்தோஷத்துடன் செல்கின்றார்கள்.

பொதுவாக நாடகத்தில் குறைகளும் இல்லாமலில்லை, இருக்கின்றது. காரணம் அவர்களுக்கு இன்னும் சீன்கள் தயாராகாததும், தியேட்டர் வசதியில்லாததுமே என எண்ணுகின்றேன். உள்ளதைக் கொண்டே உவப்பையூட்டுகின்றனர் இதில் நிழற் காட்சிகளை நிறைய உபயோகித்துள்ளது நன்றாகவேயுள்ளது கூடிய விரைவில் தோழர் V. மாதவம் பிள்ளையவர்களின் சித்திரங்கள் சிங்காரிக்கும் அதுபோது தான் 'ஓர் இரவு' ஒப்பற்ற இரவாகும்.

பின்னணி சங்கீதம் முன்னணியில் செல்ல யத்தனித்தால் நல்லது. மின்சார விளக்கு அமைப்பு முறை துரிதமாயும், தவறுமலும் இருக்க வேண்டும். சில்லறைக் குற்றங்கள் உள்ளன அவை நாளடைவில் சரியாய் விடுமென எண்ணுகின்றேன்.

காலை 6மணி ஆகியதும் கதிரவன் அடிவானில் உதிப்பது போன்ற காட்சி காண்பித்தால் நல்லது ஏனென்றால் சாதாரண மக்கள் உணர ஏதுவாகும் முறையுமாகும். உதய சூரியனில் உதயமாகிறது காதல் மணம்; சேகருக்கும், சுசீலாவுக்கும். தேவ இரகசியம் ஓரிரவின் இருட்டில் இருந்தது, அதை சேகர் இரவின் உதவியால் கதிரவன் ஒளிபட்ட இரவு போலாக்கினான். வாழ்விலோர் இரவு என காதலர்கள் சேகர், சுசீலா, பாடிக் கூடுகையில் ஒவ்வொருவர் தோன்றி மறைதல் மக்களிடம் விடா நகைப்பை உண்டாக்கி விடுகின்றது இவ்வித பல கற்பனைகளையுண்டாக்கிய தோழர் M, S. முத்து கிருஷ்ணன் அவர்கள் திறனே திறன். கிடைத்தது வைரம் அத்துடன் சாணையும் கிடைத்தால்? கேட்கவும் வேண்டுமோ? ஓரிரவு அண்ணாவின் வைரம். சாணை கற்பனைக் கலைஞர் M. S. M. அவர்கள் அணிய பகுத்தறிவு மக்கள் தான் தேவை.

இந்நாடகத்தை அண்ணா கொடுத்து உதவியதற்கும், அதை ஏற்று இக்கம்பெனியார் நடத்த முன் வந்ததும் கண்டு நாம் அவர்களை போற்றாமலிருக்க முடியாது. கூடிய விரைவில் அண்ணாவின் அடுத்த எண்ணமாகிய புதுமைச் சித்திரம் 'வேலைக்காரி' என்ற புரட்சி நாடகம் மேடையில் தோன்றுமென தெரிகின்றது அதையும் நாம் கண்டு களிப்போமாக.

* * *

"வர்க்க நலனை உத்தேசித்துத் தமது வர்க்கத்தவர்கள் விடுதலைக்காகப் போராடவேண்டிய காலம் வந்துவிட்டது"

★ ★ ★

"ஆரியர்கள் நாகரிகம் இந்நாட்டில் பரவ ஆரம்பித்தபின் பெண்கள் மோசமாகக் கேவலமாக நடத்தப்பட்டு வரலாயினர். இதற்கு ஆதாரம் மனு எழுதிய சாஸ்திரம்"

★ ★ ★

"மனுவினால்தான் இன்று பெண்கள் மனித சமூகத்தில் ஒரு அங்கமாக இந்தியாவில் கருதப்படாமலிருந்து வருகின்றனர்"

—மாதுரிதத்தர்.

### உதித்தது "உதயம்" நன்றே!

ரெலாம் சிறந்து தோன்ற
சிறப்புறு தமிழே தோன்ற
பேரெலாம் பெருகித் தோன்ற
பெருகிடும் பெருமை தோன்ற
நீரெலாம் சூழ்ந்த நாட்டின்
இன்றுள நிலைமை காட்டி
ஊரெலாம் களிக்கும் வண்ணம்
உதித்தது "உதயம்" நன்றே!


# உதயம்

மலர் 29—9—46 இதழ் 9


## ரயில்வே தொழிலாளர் வெற்றி

தென்னிந்திய ரயில்வே தொழிலாளர் கடந்த ஒரு மாதமாக வேலை நிறுத்தம் செய்து வந்ததை யாவரும் அறிவார்கள். இதனால் நாட்டில் ஏற்பட்ட கஷ்ட நஷ்டங்களையும் மக்கள் உணர்ந்திருப்பார்கள். இவ்வளவு தொல்லைகளும் நடக்காமல் தடுத்திருக்கலாம், நாட்டு மக்களின் நலனில் கருத்துடையவர்கள் சிறிது புத்தி சாலித்தனமாக நடந்திருந்தால் இருந்தாலும் இப்பொழுதாவது, நிலைமையை உணர்ந்து அதற்குத் தகுந்த வண்ணம் நடந்து கொண்டதற்காக இதற்குப் பொறுப்பானவர்களைப் பாராட்டுகிறோம்.

எந்த காரணத்தைக் குறித்து ரயில்வே தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்தார்களோ அதில் அவர்கள் வெற்றிபெற்று விட்டார்கள் என்று நம்புகின்றோம். இந் நம்பிக்கையைக் கீழே காணும் செய்தி நமக்களிக்கிறது.

அதாவது,

"எந்த ரயில்வே தொழிலாளியையும் வேலையிலிருந்து நீக்குமுன் அந்தத் தொழிலாளி தனது வாதத்தைத் தகுந்த அத்தாக்ஷிகளுடன் தகுந்த அதிகாரியிடம் இலாகா விசாரணையின் போது எடுத்துக் கூறிய பிறகு அவ்வித நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டுமென்ற முக்கியமான உரிமையை மத்திய ரயில்வே போர்டார் தொழிலாளிகளுக்கு அளிக்க முடிவு செய்திருக்கின்றனர்."

என்பதாகும். இந்த முக்கியமான உரிமைக்காகவே தான் இத்தனை நாளாக, இவ்வேலை நிறுத்தமும் அதனால் விளைந்த கஷ்டநஷ்டமும் ஆகும்.

இந்த உரிமை புதியதல்ல. ஏற்கனவே தென்னிந்திய ரயில்வே தொழிலாளிகளால் அனுபவிக்கப்பட்டு வந்ததாகும். இவ்வுரிமையைத் தென்னிந்திய ரயில்வே ஏஜண்டு பறிமுதல் செய்துவிட்டார். இதைச் செய்யாமல் அவரைத் தடுத்திருக்கலாம், அல்லது இன்று வெளியிட முடிவு செய்திருக்கும் உத்தரவை, ரயில்வே போர்டார் அன்றே, வேலை நிறுத்தம் துவக்கப்படுவதற்கு முன்னே வெளியிட்டிருக்கலாம். இவ்வாறு செய்திருந்தால், இவ்வேலை நிறுத்தமும் ஏற்பட்டிருக்காது, மக்கள் ஒரு மாதகாலமாக இவ்வளவு தொல்லைகளுக்கும் உள்ளாயிருக்க வேண்டியதில்லை, நூற்றுக்கணக்கான பேர் தடியடிபட்டு ஆஸ்பத்திரியில் கிடக்கவும் துப்பாக்கிக் குண்டுக்கு பலர் இரையாகவும் ஆன நிலை ஏற்பட்டிருக்காது இதை எண்ணும் போது, இந்த ஏகாதிபத்தியப் போக்குத் தான் இதற்குக் காரணம் என்று கருத வேண்டியிருக்கிறது.

ஏனெனில் ஏகாதிபத்தியம் தான், உரிமையைக்காகபோராடும், மக்களை அடக்கி ஒடுக்குவது வழக்கம். இறுதியில் தங்கள் அடக்குமுறைகள் பலிக்கவில்லை யென்று உணர்ந்தால் விட்டுக்கொடுப்பது வழக்கம் அதுபோலவே இன்று இந்நாட்டு சர்க்காரும் நடந்துகொண்டிருக்கிறது, உரிமைக்காகப் போராடி வெற்றி பெற்ற ஒரு சர்க்காரே மற்றவர்கள் உரிமைக்காகப் போராடுவதைப் பரிட்சைப் பார்ப்பதென்றால் நமக்கு ஆச்சரியமாகவே யிருக்கிறது. இதனால் ஏகாதிபத்தியம், தனது பிடியில் சிக்கிய எவரையும் தன் போக்குக்குத் திருப்பி விடும் என்று எண்ணவேண்டியிருக்கிறது.

எனவே, உரிமைக்காகப் போராடும் மக்கள், தங்கள் உரிமைக்காக, தங்கள் உயிரையும் உடமையையும் பலி கொடுக்காமல் உரிமையைப் பெறமுடியாது என்பது இதனால் விளங்கும் என்றே கருதுகின்றோம்.

மற்றும், இந்த அளவுக்குத் தென்னிந்திய ரயில்வே தொழிலாளிகள் வெற்றி பெற்றதற்கு முக்கிய காரணம், இவர்கள் ஓரளவுக்காவது கட்டுப்பாட்டுடனும் உறுதியுடனும் நடந்து கொண்டதே யாகும். இதையும் இனி, உரிமைக்காகப் போராடும் இதர மக்களும் படிப்பினையாகக் கொள்ள வேண்டும்.

மேலும், இதுவரையில் ரயில்வே தொழிலாளர்கள் அனாவசியமாகத் தொல்லை கொடுத்து வருகிறார்கள், வேண்டுமென்றே இவ்வேலை நிறுத்தத்தைச் செய்து வருகிறார்கள் என்று சொல்லி வந்ததும் இனி ஆதாரமற்றவை என்பது வெளியாகி விட்டது. எப்படி யெனில், எந்தக் காரணத்திற்காக இவர்கள் (தொழிலாளிகள்) வேலை நிறுத்தம் செய்து வந்தார்களோ அதே காரணத்தை ரயில்வே போர்டார் நீக்க முடிவு செய்திருக்கிறார்கள். அதாவது விசாரணையில்லாமல் தொழிலாளிகளை நீக்குவது கூடாது என்பதே யாகும். இந்தக் காரணம் நியாயமானதல்லவென்றால், இவர்கள் கேட்டது அநியாயமானதென்றால், ரயில்வே போர்டார் இம்முடிவு செய்திருக்க வேண்டியதில்லை. எப்பொழுது இம்முடிவு செய்திருக்கிறார்களோ, அப்பொழுதே விளங்கும், தென்னிந்திய ரயில்வே தொழிலாளிகள் கேட்ட உரிமைகள் நியாயமானதென்பது

இதுமட்டுமல்ல தெ. இ. ரயில்வே தொழிலாளர்கள், இவ்வுரிமையைத் தங்களுக்காக மட்டுமல்ல, அகில இந்திய ரயில்வே தொழிலாளர்கள் அனைவருக்காகவும் பெற்றிருக்கிறார்கள். எவ்வாறு எனில் "புதிய ஏற்பாட்டின்படி இந்த உரிமை எல்லா சர்க்கார் ரயில்வே தொழிலாளிகளுக்கும் இப்போது அளிக்கப்பட்டது.

என்று, ரயில்வே போர்டார் செய்துள்ள முடிவைப் பற்றிக் கூறும் செய்தி அறிவிக்கிறது."

இதிலிருந்து தெ. இ ரயில்வேத் தொழிலாளர் அடைந்த வெற்றி, அ. இ. ரயில்வே தொழிலாளர் அனைவருக்குமாக அடைந்த வெற்றியாகும் என்பது விளங்கும் ஆகவே, இவர்களது போராட்டம், எவ்வளவு பெரிய போராட்டம், எவ்வளவு நியாயமானது என்பதும் விளங்கும்.

இவ்வளவு முக்கியமானதும் நியாயமானதுமான போராட்டத்தை நடத்தியவர்களைத் தொழிலாளர் உலகம் என்றும் பாராட்டக் கடமைப் பட்டிருக்கிறது. இவர்கள் மீது வஞ்சம் தீர்க்கு முறையில் எத்தகைய நடவடிக்கையும் எடுக்க விடாமல் பார்த்துக் கொள்ளவேண்டியது தொழிலாள உலகத்தின் கடமையாகும். எப்பொழுது இவர்களது கோரிக்கை நியாயமானதென்று அறிந்து, இவர்களது கோரிக்கையை வழங்க முன் வந்தார்களோ, அப்பொழுது, இவர்கள் மீது அதாவது இக்கோரிக்கையை வலியுறுத்திச் செய்த கிளர்ச்சிகாரர்கள் மீது நடவடிக்கை எடுப்பது ஒரு நாளும் நியாயமாகாது. நியாயப்படி பார்த்தால், இவர்களுக்கு ஏற்பட்ட நஷ்டத்திற்கும், உயிர்ச் சேதத்திற்கும் பதில் சொல்லித்தீர வேண்டும் இதற்குப் பொறுப்பானவர்கள். ஆனால் இன்றைய போக்கு பார்த்தால், பதில் சொல்லாது இருந்து விட்டாலும். நடவடிக்கை எடுக்காமலாவது இருப்பார்களா என்று கேட்க வேண்டியிருக்கிறது.

தென்னிந்திய ரயில்வே ஏஜண்டு விடுத்துள்ள அறிக்கையில், வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டு வேலைக்குத் திரும்பும் தொழிலாளிகள் மீது துன்புறுத்தும் நடவடிக்கை எடுக்கப்பட மாட்டாதென்றும், ஸ்டிரைக்காலத்திற்குச் சம்பளம் கிடைக்கா தண்டனை ஒன்றுதான் மிஞ்சும் என்றும் குறிப்பிட்டிருக்கிறார்.

இது அவ்வளவு திருப்தியையளிக்கக் கூடியதாக இல்லை. வேலை நிறுத்தம் செய்ததற்கான காரணத்தைத் தொ[illegible]ரம் தேடிய பிறகு, வேலை நிறுத்தம் செய்தவர்களுக்குச் சம்பளத்தைப் பிடித்து தண்டிப்பது என்பது எவ்வாறு நியாயமாகும்? இது விஷயமாக மீண்டும் தகராறு கிளம்பும். இந்த வேலை நிறுத்தத்திற்குக் காரணமும் இதே தெ. இ. ரயில்வே ஏஜண்டு என்றுதான் சொல்லப்படுகிறது. இது விசாரணை உரிமை யளிக்கும் செய்தியில்,

"தென்னிந்திய ரயில்வேயில் ஏற்கனவே இந்த முறை (தொழிலாளியை வேலையிலிருந்து நீக்குமுன் அந்தத் தொழிலாளி தனது வாதத்தைத் தகுந்த அத்தாட்சிகளுடன் தகுந்த அதிகாரியிடம் இலாகா விசாரணையின் போது எடுத்துக் கூறுவது) பின்பற்றப் பட்டது. ஆனால் மற்ற ரயில்வேக்களிலுள்ள ஏற்பாட்டிற்கு அனுகுணமாக இருக்க வேண்டி இந்த முறை மாற்றப்பட்டது. இதன் காரணமாகத்தான் எஸ். ஐ. ஆரில் வேலை நிறுத்தம் ஏற்பட்டது"

என்று காணப்படுவதிலிருந்து உறுதிப்படுகிறது. இவ்வேலை நிறுத்தத்திற்கே காரணமாகயிருந்தவர் ஏஜண்டாக யிருக்கையில், வேலைநிறுத்தம் செய்தவர்களுக்குத் தண்டனையளிப்பதோ அதற்காக சம்பளத்தை இழக்க வேண்டுமென்பதோ ஒரு நாளும்

நியாயமாகாது. வேண்டுமானல் இவ்விருசாராருடைய வாதங்களையும் விசாரித்து முடிவுகூற அட்ஜூடிகேட்டரை நியமிக்கலாம். இதைச் செய்யாமல், சர்க்கார், ஏஜண்டின் இஷ்டப்படி நடக்க விட்டு விடுவார்களேயானல், மீண்டும் தகராறு கிளம்பும். இதற்குப் பொறுப்பாளி சர்க்கார் தான் என்று மக்கள் கருதவேண்டி நேரிடும். ஆகவே அத்தகைய நிலைமை ஏற்படாதவாறு தடுத்து முன்னெச்சரிக்கையாக நடந்து கொள்வார்கள் என்று நம்புகின்றோம். அதோடு தொழிலாளிகளும், தங்களுக்குள் கட்டுப்பாட்டையும் உறுதியையும் வளர்த்து வந்தால் தான் நியாயமான உரிமைகளைப் பெறலாம் என்பதையுணர வேண்டுமென்று ஆசைப்படுகிறோம்.

---

# கோவில் சொத்துக்கள்

இந் நாட்டைப்போல் கோவில்கள் நிறைந்த நாடு வேறு எதுவும் இருக்க முடியாது. தட்டி விழுந்தால் கோவில்கள் மேலே விழும் அளவுக்குக்மேல் கோவில்கள் பெருகிவிட்டன. இவைகளில் நூற்றுக்கணக்கான பெரிய கோவில்கள் இருக்கின்றன. இவைகள் பல ஆயிரக்கணக்கான பணம் செலவு செய்யப்பட்டுக் கட்டப்பட்டவைகளாகும். இவைகளுக்கு ஆராதனை முதலியவைகள் [illegible] உற்சவங்கள் முதலிய நடத்துவதற்கும் இலட்சக்கணக்கில் மதிப்பிடத்தக்க சொத்துக்கள் உண்டு. இவைகளில் உள்ள நகைகளின் மதிப்போ இவ்வளவு என்று சொல்ல முடியாது. இது தவிர இவைகளின் பேரால் மக்கள் வருடந்தோறும் செலவழிக்கும் பணமோ பல இலட்சங்களாகும்.

இவைகள் எல்லாம் யாரால்? எப்பொழுது? எதற்காக ஏற்படுத்தப்பட்டன? என்பவற்றை ஒவ்வொருவரும் சிந்தித்துப் பார்க்க வேண்டியது பகுத்தறிவுள்ளவர்களுடைய கடமையாகும்.

இன்றுள்ள கோவில்கள் எல்லாம் ஏழாம் நூற்றாண்டு எட்டாம் நூற்றாண்டுகளுக்குப்பின் ஆரியர்களால் ஆரியர் மதமாகிய இந்து மதத்தைப் பரப்புவதற்கு ஏற்படுத்தப்பட்டவைகள் என்பது பழைய நூல்களிலிருந்து விளங்கும். ஆரியர்கள், அந்நாளில் இந் நாட்டை யாண்ட மன்னர்களையும் அமைச்சர்களையும் தங்கள் வசப்படுத்திக்கொண்டு அவர்களைக்கொண்டு பொது மக்களின் வரிப்பணத்திலிருந்து இத்தகைய கோவில்களைக் கட்டச் செய்திருக்கிறார்கள். அவைகளுக்குச் சொத்துக்களும் எழுதி வைத்தார்கள். இதற்குப் புராணங்களிலிருந்து எவ்வளவோ உதாரணங்களை எடுத்துக்காட்ட முடியும். மன்னர்கள் ஆண்ட நாடு அவர்களுக்குச் சொந்தமில்லாமல் போய்விட்டது; மன்னர்கள் இயற்றிய சட்ட திட்டங்கள் இன்று செல்லுபடியாகாமல் போய்விட்டது; மன்னர்களுக்குப் பதிலாக மக்களே இன்று ஆள முற்பட்டு விட்டார்கள். இந்த நிலையில், அன்று மன்னர்கள் தங்களிஷ்டப்படி கட்டிய கோவில்களும் அவைகளுக்காக மக்கள் வரிப்பணத்தை தன்னிஷ்டம்போல் எழுதி வைத்தவைகள் அப்படியே இருக்கவேண்டும், மக்களுக்கு மாற்றியமைக்க அதிகாரமில்லையென்று சொல்ல முடியுமா? மன்னர்களை நீக்கவும் மன்னர்கள் செய்த சட்டங்களைத் திருத்தவும் அதிகாரம் பெற்றிருக்கும் மக்களுக்கு மன்னர்கள் நிறுவிய கோவில்களையோ அவைகளுக்கு எழுதிவைத்த சொத்துக்களையோ திருத்தியமைக்கவோ மாற்றி எழுதவோ உரிமையில்லையென்று சொல்ல முடியுமா? இதை முடிவு செய்ய வேண்டியது பொது மக்களாகும். இதைச் செய்ய இன்றைய சர்க்காருக்கு உரிமையில்லையென்று சிலர் பூச்சாண்டி காட்டுவதைக் கண்டு பொது மக்கள் ஏமாந்து விடக்கூடாதென்பதோடு தங்களுக்கு அதில் உரிமையிருக்கிறது என்பதையும் உணர்ந்து கொள்ள வேண்டுமென்று ஆசைப்படுகிறோம்.

அடுத்தபடியாக, இவைகள் எதற்காக நிறுவப்பட்டன என்று சொல்லப்படுகிறதென்றால், மக்களை நல்வழிப்படுத்தி ஒழுக்கமாக வாழச் செய்யவும் நல்ல முறையில் மறு பிறப்பை யடையச் செய்வதேயாகும் என்று சொல்லப்படுகிறது. இக் கோவில்கள் நிறுவப்பட்டதிலிருந்து நாளது வரை இந்த இலட்சியங்கள் ஒரு சிறிதாவது நிறைவேறியதாகச் சொல்வதற்கில்லை. மாறாக, ஒழுக்க ஈனங்களும், கொலையும், களவும் மலிந்து கிடப்பதைத்தான் காண முடிகிறது. இவைகளைக் கண்டிக்க, தடுக்க சர்க்கார் வருடமொன்றுக்குப் பல இலட்சக் கணக்கில் செலவழிக்க வேண்டியவர்களாயிருக்கிறார்கள். இவைகளுக்காக இவ்வாறு செலவழிக்கையில், இவைகள் (இக் குற்றங்கள்) பரவவிடாமல் தடுப்பதற்காக நிறுவப்பட்ட கோவில்களும் ஏற்படுத்தப் பட்ட திருவிழாக்களும் எதற்கு என்று கேட்கிறோம். இவ்வாறு மக்கள் வரிப்பணத்தை வீணாக இரட்டை வழியில் செலவழிப்பது ஒரு நாளும் நியாயமாகாது. இதைத் தடுக்கவேண்டியது நியாயமும் அறிவுடைமையுமாகும். கோவில்கள் நிர்வாகத்திலோ அவைகளின் சொத்துக்களின் பரிபாலனத்திலோ மக்கள் சர்க்கார் தலையிடக் கூடாது என்று தடுக்க யாருக்கும் உரிமையில்லை. நாடும் நாட்டிலுள்ள யாவும் மக்கள் சர்க்காருக்கு உரியதாக இருக்கையில், நாட்டிலுள்ள கோவில்களோ சொத்துக்களோ அதற்கு உரியதாக மாட்டாதா?

எனவே, மக்கள் சர்க்கார் இதில் சற்றுத் தைரியமாகவும் உறுதியாகவும் நடந்துகொண்டால், மக்களின் வரிப்பணம் வீணான வழியில் செலவுசெய்யப் பட்டதைத் தடுத்து மக்கள் வாழ்க்கை முன்னேற்றமடைய உதவி செய்யலாம்.

# நல்ல யோசனை

"ஆரம்ப ஆசிரியர்களின் நிலை இன்று கேவலமாயுளது. நம்மிடை ஒரே சங்கம் இல்லை. ஆகையால் ஒவ்வொரு ஆரம்ப ஆசிரிய யூனியன்களும் ஜில்லா போர்டு முனிசிபல், எய்டட், பஞ்சாயத்து என்ற வேறுபாடின்றி ஜில்லா சம்மேளனமாக இணைத்துக் கொள்ள வேண்டும். பின் மாகாண சம்மேளனமாக அமைத்துக் கொள்ளலாம். இதர பம்பாய், வங்காள மாகாணங்களில் இதுபோல் மாகாண சம்மேளனம் அமைத்து ஆரம்ப ஆசிரியர்கள் வெற்றியடைகிறார்கள்"

என்று பழனி தாலுகா ஆரம்ப ஆசிரியர்கள் சம்மேளன அமைப்பாளரும் பழனி தாலுகா சம்மேளன பதிவு காரியதரிசியுமான தோழர் எஸ். வில்லியம் ராஜ பத்திரிகைகளில் ஒரு அறிக்கை வெளியிட்டிருக்கிறார்.

இவரது யோசனை நல்லதுதான். நாமும் இத்தகைய யோசனையைத்தான் ஆரம்ப ஆசிரியர்களைப்பற்றி எழுதவும் குறிப்பிட்டிருந்தோம். ஆரம்ப ஆசிரியர்களின் இன்றைய பரிதாபகரமான நிலைக்கேகாரணம் இவர்களுக்கென்று தனிச் சங்கமோ, பத்திரிகையோ இல்லாததேயாகும். இவ்வளவு காலமாக தூங்கினது போதும் இனியாவது விழித்தெழுங்கள். தோழர் வில்லியமராஜ் யோசனையின்படி ஆங்காங்கு உறுதியான பலன்தரத் தக்க சங்கங்களை நிறுவுங்கள். பின் ஜில்லா கழகங்கள் மாகாண கழகங்கள் நிறுவுங்கள். உங்களுக்கென ஒரு பத்திரிகையை நடத்துங்கள். அப்பத்திரிகை உங்களிடையே உலாவினால் மட்டும் போதாது பொதுமக்களிடையே ஏனையபத்திரிகைகளைப் போல் பரவ வேண்டும் அப்பொழுது தான் உங்களுக்கும் பொது மக்களுக்கும் சம்பந்தம் இருக்கவும் உங்கள் குறைகள் நீங்க அவர்கள் அனுதாபமும் ஆதரவும் காட்டமுடியும்.

★ ★ ★

## பெண்கள் நிலை

"வேதங்கள் காலந்தொட்டே பெண்கள் சமூகம் அடிமைகளாகக் கருதப்பட்டு நடத்தப்பட்டு வந்திருக்கின்றது"
—பெண்கள் சுதந்திரப்பத்திரிகை.

---

# தம்பி! இனி உன் சூழ்ச்சிப் பலிக்காது

(அண்ணன்)

உரிமை யிழந்து அடிமையாயிருந்து வருபவர்கள் தங்கள் உரிமைக்காக பிறப்புரிமைக்காக பாடுபடும்போதெல்லாம், கிளர்ச்சி துவங்கும் பொதெல்லாம் உரிமையைப் பறித்துவந்த கூட்டம் பலவித உபாயங்களைக் கையாண்டு அடக்கியே வந்திருக்கிறது. அதுபோலவே இந்நாட்டில் இப்பொழுது உரிமையிழந்து துன்புற்ற மக்கள் பெருங் கஷ்டத்திற்கிடையே சிறு உரிமையையும் ஒரு சிறு கூட்டம் சூழ்ச்சியின் மூலம் பறித்து வருவதைக் காண்கிறோம். நாம் மட்டுமல்ல திராவிடர்கள் அனைவரும் காண்கிறார்கள். திராவிடர்கள் என்றும் இச்சிறு கூட்டத்தினருக்கு இடம் தந்துதவுவார்கள் என்பதில் கருதவேண்டாம்.

★ ★ ★

நம் நாட்டுக்கும் மற்ற நாடுகளுக்கும் பல துறைகளிலும் பற்பல வேற்றுமைகளிருந்து வருகின்றன. அதிலும், மக்கள் அறிவு விளக்கம் பெருவதிலும் திறமையுடன் விளங்குவதிலும் நம் நாட்டுக்கும் பிற நாடுகளுக்குக் அதிக வேற்றுமையிருந்து வருவதைக் காணலாம்.

நம் நாட்டில், ஒரு குறிப்பிட்ட கூட்டத்தாரே என்றென்றும் எத்துறையை யெடுத்துக்கொண்டாலும் திறமையுள்ளவர்களாகவும் தகுதியுடையவர்களாகவும் மற்றவர்கள் மிகமிகப் பின்னணியிருந்து வருவதையும் காணலாம். மற்ற நாடுகளில் இத்தகைய வேற்றுமை மடுவுக்கும் மலைக்குமுள்ள வேற்றுமை இருந்து வருவதைக் காணமுடியாது. ஒரு கூட்டத்தார் மிக உயர்ந்த நிலையிலிருந்து வருவதையும் மற்றக் கூட்டத்தார் மிக தாழ்ந்த நிலையிலிருந்து வருவதையும் காண்கிறோம்.

பொதுவாக திறமையோ தகுதியோ, ஒருவனின் சுற்றுச் சார்பு, பழக்க வழக்கம், பயிற்சி, சந்தர்ப்பம், அவசியம் ஆகியவைகளைப் பொருத்தே இருந்து வரும். இவைகள் இந்நாட்டில் ஒரு குறிப்பிட்டக் கூட்டத்தாருக்கே அமைந்திருக்கிறதே யல்லாது எல்லா மக்களுக்கும் பொதுவாக இல்லை. எல்லோரும் தகுதியுடையவர்களாகவும் திறமையுடையவர்களாகவும் விளங்க முடிவதில்லை.

இந்நாட்டிலுள்ள சாதி முறைகள் தான் இதற்குக் காரணம். பற்பல சாதிகள் வகுத்து, அந்தந்த சாதியைச் சேர்ந்தவர்கள் அந்தந்த சாதிக்குரிய தொழிலைச் செய்து வரவேண்டும் என்று நிலைமையை ஏற்படுத்திவிட்டதினால், பொதுவான திறமையோ தகுதியோ தோன்றுவதற்கு இடமில்லாமல் போய்விட்டது. இன்று தனித்தனியாகப் பிரிக்கப்பட்டுள்ள சமூகங்கள் பிறப்பின் காரணமாகவே தனித்து விளங்கவேண்டியவர்களாகயிருக்கிறார்கள். இவர்களுக்குள் ஒரு[illegible] தக்கலப்பு இல்லாமல் போய்வி[illegible]—து. அந்த சாதியை—பிறவியைச் [illegible]சேர்ந்தவர்கள் அந்தந்த சாதிக்குரிய தொழிலை செய்யவேண்டியவர்களாய் விடுகிறார்கள். அதற்கான சுற்றுச் சார்பும்,

---

இதன் தொடர்ச்சி 8-ம் பக்கம்

சென்ற வாரம் தொடர்ச்சி

### காதலும் கற்பும்

இஃது புதுவைத் தோழர் சிவம் அவர்களால் இயற்றப் பட்டது. ஆசிரியர் தமது முன்னுரையில்,

"காதலும்—கற்பும்" என்னும் பெயரிய இச்சிறு நூல், சங்க இலக்கியத் தொகை நூற்களுள் ஒன்றான "கலித்தொகை"(பாலைக் கலி) 9-ம் செய்யுளின் விளக்கம் என்று குறிப்பிட்டிருப்பதை எடுத்துக் காட்டினலே போதும் இந்நூல் எதை விளக்குகிறது என்பதற்கு.

இக்காலில், நம் நாட்டில் தமிழ் நாட்டில் நடைமுறையில் இருந்து வரும் பழக்க வழக்கங்களும் ஒழுக்கமும் ஆரியத்தின் அடிப்படையாகக் கொண்டதென்றும் தமிழர் பண்புக்கு ஒத்ததல்லவென்றும், அவைகள் யாவும் ஒழிக்கப்பட வேண்டும் என்றும் நாம் பலகாலும் கூறி வந்திருக்கிறோம் கூறியும் வருகிறோம். இவைகள் ஒழிக்கப் படுவதற்கு, நம் தமிழர்கள் கொண்ட முறைகள் என்ன பழக்க வழக்கங்கள் என்ன என்பதை யறிய வேண்டியது இன்றியமையாததாகும். அப்பொழுதுதான் இப்பொழுது கைக்கொள்ளப்படும் முறைகள் எவ்வளவு இழுக்கானதென்பதை யறிந்து அவைகளை கைவிடவும் தமிழருக்குரிய முறைகளை பின்பற்றவும் முடியும். ஆரியத்தையும் அதன் கொடுமைகளையும் வாயளவில் எடுத்துக் காட்டுவதினலும் வயிறெரிந்து பேசுவதினலும், அவைகளை ஒழிக்க முடியாது. அதற்கு பதிலாக, தமிழர்களின் பண்புகளை விளக்கும் சங்ககாலத்து இலக்கியப் பகுதிகளைச் சிறுசிறு நூல்களாக எழுதி வெளியிட்டு வந்தால், ஆரிய பழக்க வழக்கங்கள் தாமாகவே மாண்டு மடிவதுடன் நம் தமிழர் பண்பும் ஓங்கமுடியும்.

இதற்கேற்ப, நம்தோழர் சிவம் அவர்கள் சங்க இலக்கியத்திலிருந்து "காதலும் கற்பும்" என்பதை விளக்கும் பகுதியை இச்சிறு நூலின் வாயிலாக எளிய நடையில் விளக்கியிருப்பது பெரிதும் பாராட்டக் கூடிய செயலாகும்.

காதல் விளைவால் நிகழும் உடன் போக்குகள் இன்று நாட்டில் பலகாணலாம். இவைகளை இன்று தமிழ் மக்கள் குற்றமாகவும் பழி விளைப்பதாகவும் கருதி தலைவிக்கும் தலைவனுக்கும் இன்னல் பல விளைவிப்பதும் கொடுமை புரிவதும் காணலாம். இதற்குக் காரணம் என்ன? பழம் தமிழர் ஒழுக்கத்தை உணராததேயாகும். இச்சிறுநூல் அவர்களின் கண்களை இனியாவது திறக்குமா என்று ஆசைப்படுகிறோம்.

கவிஞர் சிவம் அவர்கள், இந்நாளில், ஆரியம் புகுந்ததால், செந்நெறித் தமிழர் வாழ்வு எவ்வாறு சிதையுண்டதென்பதையும், ஆரியக் கூத்தில் அந்நாள் அரசர்கள் எவ்வாறு மதிமயங்கினர்கள் என்பதையும் வெகு தெளிவாக எடுத்துக் காட்டியிருக்கிறார்.

"கற்பென ஒன்று சொன்னார்
காதலை அழிக்க அன்னார்!
வெற்பெனுந் தோள ரெல்லாம்
விதி யற்றுச்சிரமே தாழ்ந்தார்!
கற்பினைப் புலவர் சில்லோர்
கருத்திழந்த தனை ஏற்றார்!
பொற்புறும் மாதர் அந்தக்
கற்பினை அணியாய்ப் பூண்
[டார்"

என்றும்,

"வாழ்ந்தது பொய்ம்மைக்கற்பு
வளமுங் காதல் வீழ்ந்தது
சூழ்ந்தது துன்ப மெல்லாம்
சுதந்தரம் வாய்த்த நாட்டில்"

என்றும் விளக்கியிருப்பதிலிருந்து ஆரியம் புகுந்ததால் விளைந்த கேட்டினை உணரலாம்.

மற்றும் இலக்கியத்தில் கூறப்பட்டுள்ள தலைவி-தலைவன் காதலை எளிய நடையில் விளக்கியிருப்பது பாராட்டக் கூடியதாகும். அத்தகைய நூற்கள் குறைந்த விலையில் யாவரும் எளிதில் வாங்கி படிக்கக் கூடிய வகையில் எழுதவும் வெளியிடவும் வேண்டும் என்பதே நமது அவா. இச்சிறந்த முறையில் பணிபுரியும் கவிஞர் சிவம் அவர்களையும் புதுவை ஞாயிறு நூற்பதிப்பகத்தாரையும் நாம் பெரிதும் போற்றுகிறோம். தமிழகம் இவர்களின் அரும் முயற்சிக்கு ஆக்கம் தந்து ஊக்குவிக்குமென்று நம்புகின்றோம்.

விலை 3 அணா

கிடைக்குமிடம்:- ஞாயிறு நூற்பதிப்பகம், 28, அம்பலத்தாடையர் மடத்துத் தெரு, புதுச்சேரி.

[F. I.

---

## கருணை பிறக்குமா?

(தஞ்சை A. K. ராஜன்)

கடலில் கொந்தளிப்பு, வான வீதியிலே போராட்டம், தரையில் குமுறல், இவைகட்கிடையேதான் சுமார் 6 ஆண்டுகட்கு முன் உலகம் ஓடிக்கொண்டிருந்தது. நாஜிகளால் நாசமாக்கப்பட்ட நகரங்களிலிருந்து மக்களின் அழுகுரல்கேட்டவண்ணமிருந்தன; ஜனநாயகத்தின் இறுதி முடிவு கணிக்கப்பட்டுவிட்டது. நேசநாட்டினரின் சிந்தனைகள் சிதறிட்ட காலம் அது. விரைந்து வந்துகொண்டிருந்த குள்ளர்களின் குறிப்பு விசாகை, கராச்சி முதலிய பட்டணங்களின் மேல் விழுந்தன.

அந்த சமயந்தான் பாலம் தகர்ந்தது, தண்டவாளம் பெயர்க்கப்பட்டது! ரயில் கவிழ்ந்தது, கட்டிடங்களை அக்னிபகவான் முற்றுகையிட்டது, சட்டப் புத்தகங்கள் சுட்டுக்கொல்லப்பட்டது போன்ற புரட்சிதாண்டவம், அகிம்சா அண்ணலின் பக்த கோடிகளால் பாரத மாதாவின் முன்னிலையில் சுயராஜ்யசின்னங்களுடன் செய்யப்பட்டன. கண்கலங்கினேம்; அது தேசிய தோழர்கட்குப் புரட்சிமயமாய் உருவெடுத்தன. புரிந்தது சரியே என புகழ்ந்துகூறினர் அகிம்சா மூர்த்திகள்.

ஆகஸ்டு கலவரத்தில் விளைந்த அட்டூழியத்தை நீதியின் முன் நிறுத்தி விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படுமேயானல் எவ்வாறு இருக்கும் அதன் முடிவு? ரயில் கவிழ்ந்தது என்றால் எத்தனை உயிர்களின் முடிவான கட்டம், கட்டிடங்கள் கொளுத்தப்பட்டன என்பதனல், கண்ணயர்ந்த மக்களின் கதி என்ன? என்பனபோன்ற பிரச்சினைகளைப் பாரத அன்னையின் பாலகர்கட்குச் சுதந்திரகீதங்களாக்கப்பட்டன.

அப்படிப்பட்ட பயங்கர இயக்கத்தினர்கள், இயக்கத்தலைவர்கள், சர்க்காரால் குற்றஞ்சாட்டி தீர்ப்பு கூறப்பட்டுத் தண்டனையுடன், சிறை இருந்தோரை, கருணை நிறைந்த தேசிய சர்க்கார், வந்த உடனடியாக விடுதலை செய்தனர், 42ல்கைப்பற்றிய சொத்துக்களையும் திருப்பித் தருவதற்கு முகாம் அமைக்கப்பட்டன, ஒரு சிலவும் நடக்க ஆரம்பித்தன.

நாம் வரவேற்கின்றோம். தாய் நாட்டிற்காக தாய் நாட்டையே தகனம் செய்த, நம் தாய் நாட்டு தர்மப் புரபுக்கள், தளர்ந்த மனதுடைய நமது சர்க்காரால் தடை நீக்கப்பட்டனர் என்பது மகிழ்ச்சிக்குரியதே. கறை படர்ந்த சிறையைவிட்டு, வெளியேறின தோழர்கள் வந்தது நல் வரவே. இன்னும் இதுபோன்ற பல பலவித உருவத்திலே உயிர்பெற்றெழட்டும். எது எப்படி இருப்பினும், கருணையின் ஒளி, காருண்ய தேசிய சர்க்காரின் கண்களிலே இவ்வித கருணை உதயமானது கண்டு நாம் களிவுறுகிறோம். ஆனல்?

கலை உலக ஜோதி மண்டலத்திலிருந்து இரண்டு நட்சித்திரங்கள் பெயர்ந்து இருண்ட வாழ்வில் ஒளி இழந்து கிடக்கின்றனவே அவைகளின் முடிவு என்ன? திட்டிய வாளைக் கையில் ஏந்தினரா? பந்தத்துடன் பங்களா பக்கம் சென்றதுண்டா? பல பல உயிர்களைக் கூட்டாக தன்னுள் அடக்கி வரும் ரயில் தண்டவாளத்தை பெயர்த்ததுண்டா? என்ன புரிந்தனர்? இன்று இரும்புக் கம்பிகள் உள்ளிருக்கும் இரு இரத்தினங்கள் திராவிடர்களின் திருவிளக்குகள் மங்கிப் பல நாட்களாயின. அவைகளின் ஒளி பயங்கர இருட்டறையில் விரயமாக்கப்பட்டுவருகின்றது. படித்த அறிஞர் முதல் பாமர மக்கள் வரை, பார்த்து கண்கள் குளிர வேண்டிய இரு தங்கங்களையும், இன்று, இரும்புக் கம்பிகளும், கற்றவர்களும் கண்டு களிக்கின்றன.

கலை உலகின் தவப்புதல்வர்களான தியாகராஜ பாகவதர் கிருஷ்ணன் ஆகிய மாணிக்கங்களின் ஜோதியை மறுபடியும் தமிழகத்திலே பிரகாசிக்கச் செய்ய இன்றைய மக்களின் மன்றத்தினரால் முடியும் என நம்புகின்றோம். ஆகஸ்டு வீரர்கட்கு ஆதரவளித்த அன்புள்ள சர்க்கார், திராவிட மணிகளாகிய பாகவதர் கிருஷ்ணன் ஆகியோருக்கும் ஆதரவளிக்குமென திராவிடம் நம்புகின்றது.

தாய் நாட்டிற்குச் செய்யவேண்டிய தொண்டுகளில், கலைசிறந்த இரு மணிகளையும் விடுதலை செய்ய முயற்சிப்பதும் ஒன்றாகும். திராவிடராகிய எங்கள் நலம் பலவும் பலரால் சூறையாடப்பட்டு, நிற்கதியான நிலையில் உள்ள எங்கட்குத் தமிழும், அதன் கலையுமே சிறிது ஆறுதல் அளித்துவந்தன. கலைக்குத் தலைவனாய் விளங்கிய இருபுலவர்களின் உருவங்களையும் எங்கள் கண்முன் மீண்டும் தோன்ற, மக்களால் மன்றம் ஏறிய சர்க்காரை, அதே மக்களின் சார்பில் கேட்கிறோம். இந்த வேண்டுதலை ஏற்றுத், தக்கது செய்ய, [illegible] அவர்கட்குக் கருணை பிறக்குமா?

---

**உதயம்**

சந்தா விபரம்:

உள்நாடு:-

| | |
|---|---|
| வருடச்சந்தா ரூ | 5—0—0 |
| 6 மாதச்சந்தா ரூ | 2—8—0 |
| தனிப்பிரதி ரூ | 0—1—3 |

வெளிநாடு:-

| | |
|---|---|
| வருடச்சந்தா ரூ | 7—0—0 |
| 6 மாதச்சந்தா ரூ | 4—0—0 |

மானேஜர்,
"உதயம்"
திருவத்திபுரம். N.A.